சுருக்கம்

நிலம் – அரசு புறம்போக்கு நிலங்களில் நீண்ட கால குடியிருப்புகளாக உள்ள ஆக்ரமணங்களை வரன்முறைப்படுத்தி, வீட்டுமனைப்பட்டா வழங்குவது தொடர்பாக – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,
நில முடிவு அலகு, நிமு–1(2) பிரிவு

அரசாணை (நிலை) எண்.496

நாள்: 24.12.2018
ஸ்ரீவிளம்பி வருடம், மார்கழி 9
திருவள்ளுவர் ஆண்டு 2049

படிக்கவும்:–

கூடுதல் தலைமைச் செயலாளர்/நில நிருவாக ஆணையரிடமிருந்து பெறப்பட்ட கடித எண். F3/11339/2018, நாள் 10.08.2018.

*******

ஆணை:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடந்த 11.07.2018 அன்று நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில், அரசு புறம்போக்கு நிலங்களில் நீண்ட காலமாக குடியிருப்பு மூலம் உள்ள ஆக்கிரமணங்களை வரன்முறைப்படுத்துவது தொடர்பான நெறிமுறைகள் வழங்குவது பற்றிய கலந்தாய்வு நடைபெற்றது. அக்கூட்டத்தில் ஏற்கனவே செயல்படுத்தப்பட்ட ஒருமுறை வரன்முறைப்படுத்தும் திட்டத்தில் உள்ள நெறிமுறைகள் மற்றும் அதனைத் தொடர்ந்து, தற்போது செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள சிறப்பு வரன்முறை திட்டத்திற்கான வரைவு நெறிமுறைகள் எடுத்துரைக்கப்பட்டது. கலந்தாய்வில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் கூடுதல் தலைமைச் செயலாளர்/நில நிருவாக ஆணையர் கீழ்க்கண்டவாறு வழிகாட்டி மற்றும் நெறிமுறைகளை வகுக்க அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

I. கடந்த 5 ஆண்டுகள் மற்றும் அதற்கும் மேலாக உள்ள ஆக்கிரமணங்களை வரன்முறை செய்து, வீட்டுமனைப் பட்டா வழங்க தொடர் கோரிக்கைகள் வருவதைத் தொடர்ந்து, அனைத்து விதமான நீர்நிலைகள், உள்ளாட்சி அமைப்புகளின் சாலைகள், மாவட்ட, மாநில, தேசிய நெடுஞ்சாலைகள் போன்ற ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களைத் தவிர்த்து, பிற புறம்போக்கு நிலங்களில் குடியிருப்பு மூலம் 5 ஆண்டுகளுக்கு மேலாக ஆக்கிரமணம் செய்துள்ள தகுதியுள்ள நபர்களுக்கு அதனை வரன்முறை செய்து வீட்டுமனைப்பட்டா வழங்க ஒரு சிறப்பு திட்டம் செயல்படுத்தப்படுத்திடலாம்.

II. அரசு புறம்போக்கு நிலங்களில் குடியிருப்பு மூலம் ஆக்ரமணம் செய்துள்ள பயனாளிகளின் ஆண்டு வருமான வரம்பாக, நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களுக்கு குடும்பத்திற்கு ஆண்டு வருமானம் ரூ.1,00,000/– என நிர்ணயம் செய்யலாம்.

III. இந்த சிறப்பு வரன்முறைத் திட்டத்தின்கீழ் நிலமதிப்பின் அடிப்படையில் வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு நிதி அதிகார வரம்பு கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யலாம்.

| வ.எண். | பதவி | நிலமதிப்பு (ரூ.) |
|---|---|---|
| 1. | வட்டாட்சியர் | 50,000/- வரை |
| 2. | வருவாய் கோட்டாட்சியர் | 75,000/- வரை |
| 3. | மாவட்ட வருவாய் அலுவலர் | 1,50,000/- வரை |
| 4. | மாவட்ட ஆட்சியர் | 5,00,000/- வரை |
| 5. | நில நிர்வாக ஆணையர் | 7,50,000/- வரை |
| 6. | அரசு | 7,50,000/-க்கு மேல் |

IV. ஊரகப் பகுதிகளில் 4 சென்ட்டுக்கும், நகரப் பகுதிகளில் 2½ சென்ட்டுக்கும், மாநகராட்சி பகுதிகளில் 2 சென்ட்டுக்கும், இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கலாம்.

V. ஆட்சேபணையற்ற அரசு புறம்போக்கு நிலங்களிலுள்ள ஆக்கிரமணங்களை வருவாய் கோட்ட அலுவலர் தலைமையில் வட்ட ஆட்சியர் மற்றும் வட்ட தலைமை நில அளவர் ஆகியோரை கொண்ட குழுவால் சரிபார்க்கப்பட்டு பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

VI. ஆட்சேபகரமில்லாத புறம்போக்கு நிலங்களில், கண்டறியப்பட்ட குடியிருப்பு ஆக்ரமணங்கள், சுமார் 1,26,066 இனங்களுக்கு வருவாய் நிலை ஆணை எண்.21-இன் கீழ், மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டு, வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

VII. (a) மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் சம்மந்தப்பட்ட கோட்டாட்சியர் ஆகியோரை உறுப்பினர்களாக கொண்ட மாவட்ட அளவிலான குழு நில நிருவாக ஆணையர் மற்றும் அரசின் அனுமதி தேவையில்லாத இனங்களில் ஆக்கிரமணங்களை வரன்முறை செய்யலாம். உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்புவிக்கப்பட்ட நிலங்களில் விலக்களிப்பு செய்யவேண்டிய தோப்பு, களம் மற்று இதர நேர்வுகளில் சம்மந்தப்பட்ட உள்ளாட்சி துறை அலுவலர் இக்குழுவில் உறுப்பினராக இருந்து ஒப்புதலை அளித்து அந்நிலங்களில் உள்ள குடியிருப்பு ஆக்கிரமணங்களை தகுதியின் அடிப்படையில் வரன்முறை செய்து பட்டா வழங்கலாம்.

(b) மாவட்ட அளவிலான குழுவினால் ஆக்கிரமணங்களை வரன்முறை செய்ய இயலாத நேர்வுகளில் சம்மந்தப்பட்ட புலத்தை மாவட்ட வருவாய் அலுவலர், சம்மந்தப்பட்ட துறை அலுவலருடன் கூட்டுப்புலத்தணிக்கை செய்து அதனடிப்படையிலான முன்மொழிவினை வருவாய்த் துறை முதன்மைச் செயலர், நில நிருவாக ஆணையர், நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் மற்றும் இணை ஆணையர், (நில நிருவாகம்) ஆகியோரை உறுப்பினர்களாக கொண்ட மாநில அளவிலான குழுவிற்கு அனுப்பி, உரிய விலக்களிப்பு ஆணை பெற்றபின்பு தகுதியுள்ள நபர்களுக்கு

வீட்டுமனைப்பட்டா வழங்கிடலாம். சம்மந்தப்பட்ட மாவட்ட வருவாய் அலுவலர், இந்நேர்வுகளை குழுமுன் வைக்கும் சிறப்பு அழைப்பாளர் ஆவார்.

VIII. தடையாணை புத்தகத்தில் பதியப்பட்டுள்ள நிலங்களில் உள்ள ஆக்ரமணங்களைப் பொறுத்தவரையில்,

a) வருவாய் கோட்ட அலுவலர் / மாவட்ட வருவாய் அலுவலரால் பதியப்பட்டிருப்பின், அதனை, மாவட்ட ஆட்சியரால் விலக்கி தகுதியுள்ள நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க சிறப்பு நேர்வாக அனுமதிக்கலாம்.

b) மேலும், மாவட்ட ஆட்சியரால், தடையாணைப் புத்தகத்தில் பதிவு செய்ய ஆணையிடப்பட்டிருக்கும் நேர்வுகளில் மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் கோட்டாட்சியர் ஆகியோரை உறுப்பினர்களாக கொண்ட மாவட்ட அளவிலான குழுவின் ஒப்புதலை பெற்று அதனடிப்படையில், காரண விளக்கங்களை தெரிவித்து விலக்களிப்பு அனுமதியினை பெற்று தகுதியுள்ள நபர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

c) அரசளவில் பதிவு செய்திட ஆணையிடப்பட்டிருப்பின், உரிய முன்மொழிவினை மேலே இனம் 7(b)–இல் குறிப்பிடப்பட்டுள்ள மாநில அளவிலான குழுவிற்கு விலக்களிப்பு பெறுவதற்கு அனுப்பிவைக்கவேண்டும்.

IX (a) சென்னை மாநகர், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள சென்னை மாநகர் சூழ் பகுதிகள், இதர மாநகராட்சி மற்றும் நகரப்பகுதிகளில் வரன்முறைப் படுத்துவதற்கு உள்ள தடையாணை தொடரலாம். மற்ற நகரங்களில் இந்த தடையாணையினை விலக்கி மாவட்ட அளவிலான குழு உரிய நடைமுறைகளை பின்பற்றி வரன்முறை செய்யலாம். சென்னை மாநகர், மாநகர் சூழ் பகுதிகள் மற்றும் இதர மாநகராட்சி பகுதிகளில் அரசின் அனைத்து புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமணம் தொடர்பாக மாவட்ட நிர்வாகம் GLR மற்றும் புலத்தணிக்கை ஆகியவற்றின் மூலமாக விபரங்களை சேகரித்து கொள்கை முடிவு எடுக்கும் பொருட்டு அவ்விபரங்களை வைத்திருக்க வேண்டும்.

(b) நீர்நிலை போன்ற ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களில், நீண்ட காலம் ஆக்ரமணம் செய்துள்ளவர்களை அப்புறப்படுத்தி, அதன் தன்மை மாறாமல் பாதுகாக்கும் பொருட்டு, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலம் அடுக்குமாடி குடியிருப்புகளில் மேற்படி ஆக்ரமணதாரர்களை குடியமர்த்தலாம்.

X. மேய்க்கால், மந்தைவெளி மற்றும் சாலைகள் போன்ற மற்ற ஆட்சேபணையுள்ள புறம்போக்கு நிலங்களில் வசிப்பவர்களுக்கு இதே முறையில் முடிந்த அளவிற்கு மாற்று இடம் கண்டறிந்து குடிசை மாற்று வாரியம் மூலம் அடுக்குமாடி குடியிருப்புகளில் குடியமர்த்தலாம். மிக நீண்ட காலமாக இந்நிலத்தில் வசிப்பவர்களுக்கு, தவிர்க்க முடியாத இனங்களில் அதே

..4..

இடத்தினை வரன்முறைப்படுத்த இயலுமா என்பது குறித்தும் அல்லது அதே இடத்தில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் அடுக்குமாடி கட்டிடங்கள் கட்டி குடியமர்த்துவது குறித்தும், ஆய்வு செய்து மாநில அளவிலான குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பலாம்.

XI. இச்சிறப்பு வரன்முறைத் திட்டம் 6 மாத காலத்திற்குள் செயல்படுத்தப்பட வேண்டும். மேலும் இந்த விலக்களிப்பானது இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் காலத்தில் மட்டும் பொருந்தும்.

XII. ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலங்களில், 20 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டுள்ள கோயில்களுக்கு, மின்சார இணைப்பு வழங்குவதற்கு, கோயில் நிர்வாகம் விண்ணப்பிக்கும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட வட்ட துணை வட்டாட்சியர் தடையின்மைச் சான்று வழங்கலாம். இது சம்பந்தமாக அரசு தலைமை வழக்கறிஞரின் சட்ட கருத்தினை பெற வேண்டும்.

2) மேலே பத்தி 1–இல் காணும், கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் நில நிருவாக ஆணையரின் பரிந்துரையினை ஏற்று அரசு புறம்போக்கு நிலங்களில் நீண்ட கால குடியிருப்புகளாக உள்ள ஆக்கிரமணங்களை வரன்முறைப்படுத்தி வீட்டுமனைப்பட்டா வழங்கும் சிறப்பு வரன்முறை திட்டத்திற்கான கீழ்க்காணும் நெறிமுறைகளை வகுத்து அரசு ஆணையிடுகிறது.

I. கடந்த 5 ஆண்டுகள் மற்றும் அதற்கும் மேலாக உள்ள ஆக்கிரமணங்களை வரன்முறை செய்து, வீட்டுமனைப் பட்டா வழங்க தொடர் கோரிக்கைகள் வருவதைத் தொடர்ந்து, அனைத்து விதமான நீர்நிலைகள், உள்ளாட்சி அமைப்புகளின் சாலைகள், மாவட்ட, மாநில, தேசிய நெடுஞ்சாலைகள் போன்ற ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களைத் தவிர்த்து, பிற புறம்போக்கு நிலங்களில் குடியிருப்பு மூலம் 5 ஆண்டுகளுக்கு மேலாக ஆக்கிரமணம் செய்துள்ள தகுதியுள்ள நபர்களுக்கு அதனை வரன்முறை செய்து வீட்டுமனைப்பட்டா வழங்க ஒரு சிறப்பு திட்டம் செயல்படுத்தப்படுத்திடலாம்.

ii. அரசு புறம்போக்கு நிலங்களில் குடியிருப்பு மூலம் ஆக்ரமணம் செய்துள்ள பயனாளிகளின் ஆண்டு வருமான வரம்பாக, நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களுக்கு குடும்பத்திற்கு ஆண்டு வருமானம் ரூ.1,00,000/– என நிர்ணயம் செய்யலாம்.

iii. இந்த சிறப்பு வரன்முறைத் திட்டத்தின்கீழ் நிலமதிப்பின் அடிப்படையில் வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு நிதி அதிகார வரம்பு கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யலாம்.

| வ.எண். | பதவி | நிலமதிப்பு (ரூ.) |
|---|---|---|
| 1. | வட்டாட்சியர் | 50,000/– வரை |
| 2. | வருவாய் கோட்டாட்சியர் | 75,000/– வரை |
| 3. | மாவட்ட வருவாய் அலுவலர் | 1,50,000/– வரை |
| 4. | மாவட்ட ஆட்சியர் | 5,00,000/– வரை |
| 5. | நில நிர்வாக ஆணையர் | 7,50,000/– வரை |
| 6. | அரசு | 7,50,000/–க்கு மேல் |

iv. ஊரகப் பகுதிகளில் 4 சென்ட்டுக்கும், நகரப் பகுதிகளில் 2½ சென்ட்டுக்கும், மாநகராட்சி பகுதிகளில் 2 சென்ட்டுக்கும், இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கலாம்.

V. ஆட்சேபணையற்ற அரசு புறம்போக்கு நிலங்களிலுள்ள ஆக்கிரமணங்களை வருவாய் கோட்ட அலுவலர் தலைமையில் வட்ட ஆட்சியர் மற்றும் வட்ட தலைமை நில அளவர் ஆகியோரை கொண்ட குழுவால் சரிபார்க்கப்பட்டு பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

VI. ஆட்சேபகரமில்லாத புறம்போக்கு நிலங்களில், கண்டறியப்பட்ட குடியிருப்பு ஆக்ரமணங்கள், சுமார் 1,26,066 இனங்களுக்கு வருவாய் நிலை ஆணை எண்.21–இன் கீழ், மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டு, வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

VII. a) மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் சம்மந்தப்பட்ட கோட்டாட்சியர் ஆகியோரை உறுப்பினர்களாக கொண்ட மாவட்ட அளவிலான குழு நில நிருவாக ஆணையர் மற்றும் அரசின் அனுமதி தேவையில்லாத இனங்களில் ஆக்கிரமணங்களை வரன்முறை செய்யலாம். உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்புவிக்கப்பட்ட நிலங்களில் விலக்களிப்பு செய்யவேண்டிய தோப்பு, களம் மற்று இதர நேர்வுகளில் சம்மந்தப்பட்ட உள்ளாட்சி துறை அலுவலர் இக்குழுவில் உறுப்பினராக இருந்து ஒப்புதலை அளித்து அந்நிலங்களில் உள்ள குடியிருப்பு ஆக்கிரமணங்களை தகுதியின் அடிப்படையில் வரன்முறை செய்து பட்டா வழங்கலாம்.

(b) மாவட்ட அளவிலான குழுவினால் ஆக்கிரமணங்களை வரன்முறை செய்ய இயலாத நேர்வுகளில் சம்மந்தப்பட்ட புலத்தை மாவட்ட வருவாய் அலுவலர், சம்மந்தப்பட்ட துறை அலுவலருடன் கூட்டுப்புலத்தணிக்கை செய்து அதனடிப்படையிலான முன்மொழிவினை வருவாய்த் துறை முதன்மைச் செயலர், நில நிருவாக ஆணையர், நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் மற்றும் இணை ஆணையர், (நில நிருவாகம்) ஆகியோரை உறுப்பினர்களாக கொண்ட மாநில அளவிலான குழுவிற்கு அனுப்பி, உரிய விலக்களிப்பு ஆணை பெற்றபின்பு தகுதியுள்ள நபர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கிடலாம். சம்மந்தப்பட்ட மாவட்ட வருவாய் அலுவலர், இந்நேர்வுகளை குழுமுன் வைக்கும் சிறப்பு அழைப்பாளர் ஆவார்.

VIII. தடையாணை புத்தகத்தில் பதியப்பட்டுள்ள நிலங்களில் உள்ள ஆக்ரமணங்களைப் பொறுத்தவரையில்,

a) வருவாய் கோட்ட அலுவலர் / மாவட்ட வருவாய் அலுவலரால் பதியப்பட்டிருப்பின், அதனை, மாவட்ட ஆட்சியரால் விலக்கி தகுதியுள்ள நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க சிறப்பு நேர்வாக அனுமதிக்கலாம்.

b) மேலும், மாவட்ட ஆட்சியரால், தடையாணைப் புத்தகத்தில் பதிவு செய்ய ஆணையிடப்பட்டிருக்கும் நேர்வுகளில் மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் கோட்டாட்சியர் ஆகியோரை உறுப்பினர்களாக கொண்ட மாவட்ட அளவிலான குழுவின் ஒப்புதலை பெற்று அதனடிப்படையில், காரண விளக்கங்களை தெரிவித்து விலக்களிப்பு அனுமதியினை பெற்று தகுதியுள்ள நபர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

c) அரசளவில் பதிவு செய்திட ஆணையிடப்பட்டிருப்பின், உரிய முன்மொழிவினை மேலே இனம் 7(b)–இல் குறிப்பிடப்பட்டுள்ள மாநில அளவிலான குழுவிற்கு விலக்களிப்பு பெறுவதற்கு அனுப்பிவைக்கவேண்டும்.

IX (a) சென்னை மாநகர், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள சென்னை மாநகர் சூழ் பகுதிகள், இதர மாநகராட்சி மற்றும் நகரப்பகுதிகளில் வரன்முறைப் படுத்துவதற்கு உள்ள தடையாணை தொடரலாம். மற்ற நகரங்களில் இந்த தடையாணையினை விலக்கி மாவட்ட அளவிலான குழு உரிய நடைமுறைகளை பின்பற்றி வரன்முறை செய்யலாம். சென்னை மாநகர், மாநகர் சூழ் பகுதிகள் மற்றும் இதர மாநகராட்சி பகுதிகளில் அரசின் அனைத்து புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமணம் தொடர்பாக மாவட்ட நிர்வாகம் GLR மற்றும் புலத்தணிக்கை ஆகியவற்றின் மூலமாக விபரங்களை சேகரித்து கொள்கை முடிவு எடுக்கும் பொருட்டு அவ்விபரங்களை வைத்திருக்க வேண்டும்.

(b) நீர்நிலை போன்ற ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களில், நீண்ட காலம் ஆக்ரமணம் செய்துள்ளவர்களை அப்புறப்படுத்தி, அதன் தன்மை மாறாமல் பாதுகாக்கும் பொருட்டு, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலம் அடுக்குமாடி குடியிருப்புகளில் மேற்படி ஆக்ரமணதாரர்களை குடியமர்த்தலாம்.

X. மேய்க்கால், மந்தைவெளி மற்றும் சாலைகள் போன்ற மற்ற ஆட்சேபணையுள்ள புறம்போக்கு நிலங்களில் வசிப்பவர்களுக்கு இதே முறையில் முடிந்த அளவிற்கு மாற்று இடம் கண்டறிந்து குடிசை மாற்று வாரியம் மூலம் அடுக்குமாடி குடியிருப்புகளில் குடியமர்த்தலாம். மிக நீண்ட காலமாக இந்நிலத்தில் வசிப்பவர்களுக்கு, தவிர்க்க முடியாத இனங்களில் அதே இடத்தினை வரன்முறைப்படுத்த இயலுமா என்பது குறித்தும் அல்லது அதே இடத்தில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் அடுக்குமாடி கட்டிடங்கள் கட்டி குடியமர்த்துவது குறித்தும், ஆய்வு செய்து மாநில அளவிலான குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பலாம்.

XI. இச்சிறப்பு வரன்முறைத் திட்டம் 6 மாத காலத்திற்குள் செயல்படுத்தப்பட வேண்டும். மேலும் இந்த விலக்களிப்பானது இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் காலத்தில் மட்டும் பொருந்தும்.

XII. ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலங்களில், 20 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டுள்ள கோயில்களுக்கு, மின்சார இணைப்பு வழங்குவதற்கு, கோயில் நிர்வாகம் விண்ணப்பிக்கும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட வட்ட துணை வட்டாட்சியர் தடையின்மைச் சான்று வழங்கலாம். இது சம்பந்தமாக அரசு தலைமை வழக்கறிஞரின் சட்ட கருத்தினை பெற வேண்டும்.

3) மேலே பத்தி 2–இல் கண்ட ஆணைக்கிணங்க தக்க நடவடிக்கை எடுக்கும்படி கூடுதல் தலைமைச் செயலாளர் / நில நிருவாக ஆணையர் மற்றும் அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
கூடுதல் தலைமைச் செயலாளர்/நிலநிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை–600 005.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்/
மாவட்ட வருவாய் அலுவலர்கள்
தலைமைச் செயலகத்தின் அனைத்து துறைகள், சென்னை–9.
நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
ஊரக வளர்ச்சி (ம) பஞ்சாயத்துராஜ், சென்னை–9.
நிதித்துறை, தலைமைச்செயலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (வருவாய் (ம) பே.மே.) அவர்களின்
நேர்முக உதவியாளர், சென்னை–9.
வருவாய்(ம) பே.மே.த்துறை முதன்மைச் செயலரின் தனிச்செயலர், சென்னை–9.
இ.கோ/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.